பேசினார்கள். அவருடைய தொகுதியில் கட்டிடம் எல்லாம் இடிந்து விட்டது என்றார். அமைச்சர் எழுந்து எந்தக் கட்டிடம் எங்கே விழுந்துவிட்டது என்று கேட்டார். எல்லாம் இடிந்து போய்விட்டது என்றார். என் தொகுதியே இடிந்துபோய்விட்டது என்றார். இது என்ன முறை. ரோடு போடவேண்டும். பாலம் கட்ட வேண்டும். ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும். குடிதண்ணீர் கொடுக்க வேண்டும். எல்லாம் வேண்டும். ஆனால் வரி மட்டும் போடக்கூடாது. இது எப்படி நடக்கும்? எதுவும் இல்லாமல் நடக்க வேண்டும் என்பதற்கு மாயாபஜார் எங்கு இருக்கிறது? அந்த மணிமேகலையாவது அட்சய பாத்திரத்தைக் கொடுத்து விட்டுப் போனாளா? அவளும் யாருக்கும் பயன்படுத்தத் தெரியாது என்று தண்ணிரிலே விட்டுவிட்டாள். (மணியடிக்கப் பெற்றது).

பிற்பகல் 1–20

10. எதிர்க் கட்சித் தலைவரும் அவரைச் சார்ந்தவர்களும் அனுமதியின்றி தொடர்ந்து பேச முயன்றதை யொட்டி நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியில் தெரிவித்த செய்தி குறித்து-பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகம், எதிர்க் கட்சித் தலைவர் பற்றி நீங்கள் சொல்லியிருக்கிற காரணத்தால் நானும் ஒருசில விளக்கங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. இங்கேயிருந்து வெளியேறியதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் வெளியே போய், நேற்று முதல்வர் அவர்கள் சொன்ன ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி பதில் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நேற்று அதற்குப் பதில் சொல்ல இன்றைக்கு நான் வாய்ப்புக் கேட்டேன். தரவில்லை. இந்தியாவிலேயே எந்த ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கும், பாராளுமன்றத்திலும், மாநிலங்கள் அவையிலேயும்கூட எந்த நேரத்திலும் எழுந்து பேச அனுமதி இருக்கிறது; அந்த அதிகாரத்தின் பேரில்தான் பேச அனுமதி கேட்டேன்; நாங்கள் சபாநாயகர் சொல்கிறபடி முறைகேடாக எதுவும் செய்யவில்லை என்று சொல்லிவிட்டு, பிறகு, நாங்கள் மன்னிப்பு எதுவும் கேட்கமாட்டோம் என்றெல்லாம் வெளியிலே சொல்லியிருக்கிறார். எவ்வளவு முற்றிலும் முரண்பாடான செய்திகளை வெளியே போய்ச் சொல்கிறார். என்பதற்கு நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. நேற்றையதினம், இங்கே ஒரு உறுப்பினர் ''எல்.டி.டி.ஈ.-ரா' தொடர்புபற்றி முதலமைச்சர் ஏற்கனவே இந்த அவையிலே தெரிவித்தார். அதற்கு இதுவரையிலும் என்ன ஆதாரம்'' என்று கேட்டார். அவர்தான் ஆரம்பித்தது, 'ரா'வைப் பற்றி இங்கே பேசக்கூடாது என்பதற்காக எதிர்க்கட்சித் தலைவரின் வாதம் இருக்குமேயானால் அதைப் பற்றி இங்கே பேச ஆரம்பித்தது

1.18 எதிர்க்கட்சித் தலைவரும் அவ்ரைச் சார்ந்தவர்களும் அனுமதியின்றி தொடர்ந்து பேச முயன்றதையொட்டி கழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியில் தெரிவித்த செய்தி குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு

[பேரவைத் தலைவர்] [1994 மார்ச் 30

யார்? காங்கிரஸ் உறுப்பினர். அதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் பதில் சொன்னார். இப்போதுகூட சில செய்திகள் வந்திருக்கின்றன. 'ரா', 'எல்.டி.டி.ஈ.'-யோடு தொடர்பு கொண்டு சில பேரம் பேசுவதாக செய்தி வந்திருக் கிறது என்று சொன்னார். சொன்னவுடன் எதிர்க்கட்சித் தலை வரும், மற்ற அத்தனை பேரும் எழுந்து நின்று கொண்டு, அவர் 'ரா'வைப்பற்றி எப்படி இங்கே பேசலாம் என்று ஏதோ குழப்பம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த நேரத்திலேதான், நான் அவைக்குள்ளே, என்னுடைய அறையிலேயிருந்து ஓடி வந்தேன். ஓடி வந்ததும், எதிர்க் கட்சித் தலைவருக்கு நானே சொன்னேன். உங்களுக்கு பதில் அளிக்க வாய்ப்பு அளிக்கிறேன் என்று நான் திரும்பத் திரும்பச்சொல்லிக் கொண்டே இருந்தேன். உங்களுக்கும் வாய்ப்பு அளிக்கிறேன். பேசுகின்ற உறுப்பினர் திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசனுக்கும் வாய்ப்பு அளிக்கிறேன் என்று திரும்பத் திரும்ப நான் சொன் னேன். இவருக்கு மட்டும் வாய்ப்பு அளிக்கிறேன் என்று சொல்ல வில்லை, பி.ஆர்.எஸ். வெங்கடேசனுக்கும் வாய்ப்பு அளிக்கிறேன் என்று நான் சொன்னேன். ஆனால், நாங்கள் உட்காரவே முடி யாது, அவரைப் பேசவே விடமாட்டோம் என்றுதான் நேற்று அவர்கள் முறைகேடாக நடந்து கொண்டிருக்கிறார்கள். அவ் வளவு முறைகேடாக நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே தான், முதலமைச்சரே கூட எழுந்திருந்தார்கள். இவ்வளவு முறைகேடாக ஏன் நடந்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் மீது இவர்கள் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசிய நேரத்தில் அது எங்களுக்கு எப்படி இருந்திருக்கும், இன்றைக்கு இவர்கள் மீது குற்றச்சாட்டு வந்தவுடன் பேசவே விடமாட்டோம் என்று அவை நடவடிக்கைகளை மறித்துக் கொண்டிருக்கிறார்களே என்றுதான் கேட்டார்கள். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவரும், அவ்ரைச் சேர்ந்தவர்களும், இங்கே கோஷம் எழுப்பிக் கொண்டு வெளியே போய்விட்டார்கள். சிலர் கூட உட்கார்ந்து கொண்டே இருந் தார்கள். அப்பொழுதுதான் எதிர்க்கட்சித் தலைவர் எல்லோரும் வாருங்கள் என்று பலாத்காரம் செய்து கூப்பிடுவது போல், கூப்பிட்டார்கள். பேசிக் கொண்டிருந்த பி. ஆர். எஸ். வெங்க டேசன் கூட, நான் பதில் சொல்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தார். அவரையும் விடவில்லை. எல்லோரும் வாருங்கள் என்று முறைகேடாக அழைத்துக்கொண்டு போனார்கள். ஆனால் வெளியே போனதற்குப் பிறகு அரசியல் சட்டத்திற்கே விரோதமாக மத்திய அரசைப் பற்றியும் பிரத மரைப் பற்றியும் விமர்சித்திருக்கிறார்கள். என்கிற செய்தி யைச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன் நேற்றைய

அனுமதியின்றி தொடர்ந்து பேச முயன்றவந்ததையொட்டி நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியில் தெரிவித்த செய்தி குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு

1994 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

தினம் பிரதமர் பற்றி ஒரு வார்த்தையாவது இங்கே பேசப்பட்டதா என்றால் அவை நடவடிக்கைக் குறிப்பிலே பார்க்கலாம் பிரதமரைப் பற்றி எந்தக் குறிப்பும் நேற்றையதினம் இங்கே சொல்லப்படவே இல்லை. அப்படியே கூட பிரதமரைப் பற்றியோ மத்திய அரசாங்கத்தைப் பற்றியோ விமர்சிக்கவோ கூடாது என்பதாக விதி இருக்கிறது. அரசியல் சட்ட விதி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நமக்கு இருக்கிற விதியிலேயே பேரவை விதி 92 பிரிவு 7-ன்படி

> "A member while speaking, must not. . . .
> (vii) reflect upon the conduct of the President or any Governor or any court of Justice or use the Governor's or President's name for the purpose of influencing a debate."

என்று இருக்கிறது. ஆளுநரைப் பற்றியோ, குடியரசு தலைவரைப் பற்றியோ அல்லது நீதிமன்றங்களிலே இருக்கக்கூடிய நீதிபதிகளைப் பற்றியோ அவர்களுடைய பெயரை உச்சரித்தோ அல்லது அவர்களுடைய நடத்தை பற்றியோ குறிப்பிட்டு இந்தப் பேரவையில் பேசக் கூடாது என்றுதான் விதி இருக்கிறது. இதில் எதிர்க்கட்சித் தலைவராகவே மத்திய அரசாங்கத்தைப் பற்றியும் பிரதமரைப் பற்றியும் பேசக் கூடாது என்று ஒன்றை சேர்த்துக் கொண்டு பிரதமரைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள் என்பது போன்ற செய்தியை வெளியே கிளப்பியிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையை வைத்து நாளைக்கு நாங்கள் பேரவைக்குள்ளே போய் ஏதாவது விவகாரம் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு வேண்டிய சில மனிதர்களிடத்தில் ஆலோசனை கலந்ததாகவும் டெல்லியோடு ஆலோசனை கலந்ததாகவும் இங்கேயும் ஆலோசனை கலந்ததாகவும் நேற்றே கூட எனக்குச் சில செய்திகள் தெரிய வந்தன. அந்தப் பெரிய மனிதர்கள் கூட என்ன விவகாரம் செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது பிரதமரைப் பற்றிப்பேசி விட்டார்கள். ஆகவே விவகாரம் செய்யப் போகிறோம் என்று அவர்களிடத்திலேயும் அனுமதி பெற்று இங்கே அவைக்கு வந்து இன்றைக்கு விவகாரத்தை இழுத்திருக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். ஒருவேளை பிரதமரைப் பற்றிப் பேசினார்கள் பேசினார்கள் என்று இவர்கள் வெளியிலே போய் பரப்பிக் கொண்டிருக்கிற வதந்தியைப் பார்க்கின்ற போது இங்கே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் அதைத் தொடர்ந்து குறுக்கிட்டுப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மத்திய அரசாங்கத்தின் உளவுத் துறையாகிய "Reserach and Analysisi Wing" என்பதை ஆங்கிலத்திலே சுருக்கமாக 'ரா' என்று சொல்வதை காதிலே

 எதிர்க்கட்சித் தலைவரும் அவரைச் சார்ந்தவர்களும் அனுமதியின்றி தொடர்ந்து பேச முயன்றவந்ததையொட்டி நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியில் தெரிவித்த செய்தி குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு

[பேரவைத் தலைவர்] [1994 மார்ச் 30

சரியாக வாங்காமல், ராவ், ராவ் என்று நினைத்துக் கொண்டு வெளியே போய் இப்படி வதந்திகளைக் கிளப்பியிருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிலைமை இவ்வாறு இருக்க நேற்றையதினம் தொலைக்காட்சியிலே கூட இந்தச் செய்தியை ரொம்ப விரிவாகச் சொன்னார்கள். இங்கே நடந்ததை—தொலைக்காட்சியினுடைய நிருபர்களுக்கு இங்கே இடம் வழங்கியிருக்கிறோம்— அவர்கள் பார்த்திருக்கிறார்கள்' அப்படி நடக்கவில்லை என்பதையாவது ஒரு செய்தியாகச் சொல்லியிருந்தால் இங்கே வந்து செய்தி சேகரிக்கின்ற அந்தத் தொலைக்காட்சி நிறுவனத்தினர் முறையாக நடந்து கொள்கிறார் என்று கூட நாம் கருதலாம்.

பிற்பகல் 1-25

அல்லது அவர் எழுதிக் கொடுத்ததை மாற்றி அங்கேயிருக்கிற அதிகாரிகள் செய்கிற சிலுமிச வேலைகளில் இதுவும் ஒன்றோ, என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஆகவே எந்தச் செய்தியையும், இங்கே நடந்த செய்தியை அப்படியே மாற்றி வெளியிலே போய் பேசுவதைத்தான் அவர்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இதுதான் எடுத்துக் காட்டு. இன்றைக்கு அவர் தெரிவித்திருப்பதைப் போல விவாதம் நடந்துகொண்டிருக்கிற போது எதிர்க்கட்சித் தலைவர் எப்போது எழுந்தாலும் அவருக்கு பேச அனுமதி அளித்திருக்கிறோம். இன்றைக்கு விவாதமே தொடங்கவில்லை. கேள்வி நேரம் முடிந்தவுடன் அவர் எழுந்து நின்று கொண்டு அவர் கட்சியினர் கொடுத்திருக்கிற முக்கியப் பிரச்சினையையேகூட எழுப்பவிடாமல் தடுத்துக் கொண்டிருந்தார். அதைத்தான் நான் முறைகேடு என்று திரும்பத் திரும்பச் சொன்னேன். எதிர்க் கட்சித் தலைவர், அந்தப் பிரச்சினையைப் பேச விட்டுவிட்டு அதிலே எழுந்து ஏதாவது கருத்து சொல்வதாக இருந்தால் சொல்லலாம். அல்லது அவர் தெரிவிப்பது போல வேறு ஏதாவது பிரச்சினை பற்றி இங்கே பேச வேண்டும் என்று கருதியிருப்பாரேயானால் என்னிடத்தில் எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ கூட, இதைப்பற்றி நான் இன்றைக்கு ஜீரோ ஹவர்'-இல், கேள்வி நேரம் முடிந்தவுடன் எழுப்ப வேண்டும் என்று கேட்டிருந்தால் அனுமதி வழங்கியிருப்பேன். அப்படித்தான் எல்லாச் கட்சித் தலைவர்களும் என்னிடத்தில் அனுமதி வாங்கி இங்கே வந்து எழுப்புகிறார்கள், கேள்வி நேரம் முடிந்தவுடன். எதிர்க் கட்சித் தலைவர் மட்டும் பேரவைத்

எதிர்க்கட்சித் தலைவரும் அவரைச் சார்ந்தவர்களும் அனுமதியின்றி தொடர்ந்து பேச முயன்றதையொட்டி நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியில் தெரிவித்த செய்திக்குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

1994 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

தலைவரிடத்தில் சொல்லாமல் நான் வந்து எழுப்புவேன். நான் எதிர்க்கட்சித் தலைவர், எனக்கு அதிகாரம் இருக்கிறது' அந்த அதிகாரத்தின் பேரில் பேச அனுமதி கேட்பேன் என்று சொல்கிறார்கள். இதை எவ்வளவு காலத்திற்கு அனுமதிக்க முடியும்? எனவே இங்கே நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாகத் திரும்பத் திரும்ப அவர்கள் பேசிக்கொண்டிருப்பதிலேயிருந்து இந்தப் பேரவையை முறையாக நடைபெற விடக்கூடாது என்பதற்காகத்தான் திட்டமிட்டு சில சதிச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்றே நான் கருதுகிறேன்.

நான் எந்தத் தவறும் செய்யவில்லை என்று சொல்கிற எதிர்க் கட்சித் தலைவர் எத்தனை முறை இங்கே விதிமுறைகளுக்கு மாறாக, நடைமுறைகளுக்கு மாறாக நடந்துகொண்டார் என்பதையும் அந்த நேரத்திலேயே அவருக்கு நேருக்கு நேராகவே நான் குறிப்பிட்டுச் சொன்னேன். இந்த இந்தப் பிரச்சினைகளில் நீங்கள் தவறாக நடந்து கொண்டீர்கள், பேரவைத் தலைவரைப் பார்த்து முறை கேடாகப் பலமுறை நடந்துகொண்டீர்கள், அதைச் சகித்துக் கொண்டோம். ஒருமுறை முதலமைச்சர் அவர்கள் நின்று பேசிக்கொண்டு இருக்கிறபோது, அப்போதும் மிக முறை கேடாக ஆட்சேபகரமான முறையில், இந்த அவை சகித்து கொள்ள முடியாத முறையிலே எல்லாம், தொனியிலே எல்லாம் நடந்துகொண்டீர்கள், அந்த நேரத்திலே கூட ஒரு அசம்பாவிதச் சூழ்நிலை ஏற்படுவதைப் போன்ற ஒரு நிலைமை உருவான நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெருந்தன்மையால் தன்னுடைய கட்சி உறுப்பினர்களை அமைதிப்படுத்தியதன் காரணமாக அந்த அசம்பாவிதச் சம்பவம் நடக்கவில்லை. தொடர்ந்து எப்படியாவது ஒரு அசம்பாவிதச் சம்பவத்தை இந்த அவையில் உருவாக்க வேண்டும் என்பதையே தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் செயல்படுகிற காரணத்தால் இதை இனிமேலும் நான் அனுமதிக்க முடியாது. எத்தனை முறை நீங்கள் நடந்துகொண்டதைச் சகித்துக்கொண்டோம். இனி மேலும் சகித்துக் கொள்ள முடியாது. எனவே மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நான் அவர் இங்கே நின்றுகொண்டிருக்கிற நேரத்திலேயே கேட்டேன். ஆனால் நான் எந்த தவறும் செய்யவில்லை என்று சொல்கிற எதிர்க் கட்சித் தலைவர் எத்தனை முறை இந்தப் பேரவையில் முறை தவறி நடந்துகொண்டார், அதனுடைய உச்சகட்டமாக இன்றைய தினமும் சென்ற காரணத்தால், வெளியே நடத்திய நாடகத்தை அரங்கேற்றுவதற்காக இங்கே வந்த காரணத்தால் அவர் மீது இன்றைக்கு நான் நடவடிக்கை எடுக்கவேண்டி

122 எதிர்க்கட்சித் தலைவரும் அவரைச் சார்ந்தவர்களும் அனுமதியின்றி தொடர்ந்து பேச முயன்றதையொட்டி நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியில் தெரிவித்த செய்தி குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

(பேரவைத் தலைவர்) (1994 மார்ச் 30

வந்தது. அதோடு மன்னிப்புக் கேட்டாலொழிய இந்த அவைநடவடிக்கைகளில் கலந்து கொள்ளமுடியாது என்று எதிர்கட்சித் தலைவருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் இன்றைக்கு நான் ஒரு தீர்ப்பை வழங்கி அதை அவர்கள் ஒப்புக்கொண்டு இங்கே வந்து நடவடிக்கைகளில் கலந்து கொள்வதாக இருந்தால்தான், மன்னிப்புக் கேட்டால் கலந்து கொள்ளலாம், உள்ளே வந்து மன்னிப்புக் கேட்க மாட்டோம் என்று சொல்வதகக இருந்தால் அவர்கள் வராமலே இருந்துகொள்வது நல்லது. உள்ளே வந்தால், மன்னிப்புக் கேட்டால் நடவடிக்கைகளில் அவர்கள் தொடர்ந்து கலந்து கொள்ளலாம். இல்லை என்று சொன்னால் அவர்களை அனுமதிப்பதில்லை என்பதைத் தெளிவாகப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டுமானால் மன்னிப்புக் கேட்டுவிட்டுத் தான் கலந்துகொள்ள வேண்டிவரும். தகவலுக்குச் சொல்கிறேன். இங்கே நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டுமானால், மன்னிப்புக் கேட்டுவிட்டுத்தான் கலந்துகொள்ள வேண்டிவரும். உள்ளே வந்து நாங்கள் மன்னிப்புக் கேட்க மாட்டோம் என்று சொல்வதாக இருந்தால் அவர்கள் உள்ளேயே வரவேண்டியது இல்லை. நடவடிக்கைகளில் கலந்துகொள்வது கூடாது என்பதற்கு அதுதான் அர்த்தம். உள்ளே வருவதாக இருந்தால், உள்ளே வந்து நாங்கள் மன்னிப்புக் கேட்கிறோம் என்கின்ற வகையிலே வரலாம். இல்லையேல், அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கூடாது. எனவே அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கூடாது என்பதற்கு பொருள் அதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். வி. சண்முகம்:

9. வரவு-செலவுத் திட்டம், 1994-95, பொது விவாதம் (தொடர்ச்சி).

பிற்பகல் 1-30.

* திரு எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க் கட்சியினரும் உள்ளே இருப்பது, வெளியே போவது பற்றியெல்லாம் நீங்கள் சொன்னீர்கள், அது உங்களுக்கே உரிய அதிகார வரம்புக்குட் பட்டது. ஆனால் தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்த வரையில் இவர்கள் உள்ளே வந்தாலும் பிரயோஜனம் இல்லை, வெளியே போனாலும் பிரயோஜனம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி). விவாதங்களிலே கூட ஏதாவது உருப்படியாக என்றைக்காவது பேசியிருக்கிறார்களா என்பதைக் கூட பத்திரிகையாளர்கள், நாட்டு மக்கள் எல்லோரும் சிந்திக்க வேண்டும்.